மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

89—

பயணியர் மாளிகை

***8606—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை கட்டுவதற்கு தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதியானது தாலுகா தலைமையிடமாகும். எனவே, இங்கு புதிய பயணியர் மாளிகையை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தில், ஆத்தூரில் பயணியர் மாளிகை அமைந்துள்ளது. ஆத்தூருக்கும்,*

2014 பிப்ரவரி 20]

கெங்கவல்லிக்கும் இடையில் உள்ள தூரம் 12 கிலோ மீட்டர் என்பதால், கெங்கவல்லியில் பயணியர் மாளிகை கட்ட தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதியில், பச்சமலை ஊராட்சியில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் மற்றும் அரசு அதிகாரிகள் அடிக்கடி மக்கள் குறை கேட்பதற்காக வந்து செல்கிறார்கள். அவர்கள் அங்கு வந்து செல்வதற்கே அரை நாள் ஆகிவிடுகிறது. அதனால் மக்களிடம் முழுமையாகக் குறைகளைக் கேட்கமுடியாமல் போய்விடுகிறது. எனவே, அங்கு தங்கள் துறையின்மூலம் புதிய பயணியர் மாளிகை அமைத்துத் தர வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

அதேபோல, தலைவாசல் பஸ் நிலையம் எதிர்புறம், தங்கள் துறையின்கீழ் உள்ள பழுதடைந்த பயணியர் மாளிகையைச் சீரமைத்து, அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூருக்கும், கெங்கவல்லிக்கும் இடையே உள்ள தூரம் 12 கிலோ மீட்டர். ஆத்தூரில் ஏற்கெனவே பயணியர் மாளிகை இருக்கின்றது, தங்கும் விடுதியும் இருக்கின்றது. ஆகவே, அங்கு ஆய்வு மேற்கொள்ள வருகின்ற நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அங்கேயே தங்கிக் கொள்ளலாம். அங்கு பயன்பாட்டைப் பொறுத்துத்தான் பயணியர் மாளிகை கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, அருகில் உள்ள ஆத்தூரிலேயே, அவர்கள் தங்குவதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவாசலில் பழைய கட்டடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வருகின்ற

2014-2015 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிதாக கட்டடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

கால்நடை மருத்துவமனை

*34480—**திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடைத் துறை விதிகளிலே குறிப்பிட்டிருக்கின்ற அளவுக்கு கால்நடைகளின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகச் செம்மல்களிலே திலகவதியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்களாகவும், அன்பிலே அன்னை தெரசாவாகவும், வீரத்திலே வீரமங்கை வேலு நாச்சியாராகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் மொத்த உருவமாக தாயே, தாங்கள் இருப்பதால்தான் தானமும், தருமமும், தளராத தாயன்பும்*